**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>**

**<u>அ.வ.எண். 72/2019 C/W அ.வ.எண்.140/2018</u>**

பெயர் : நாகஜோதி

சாட்சி – வா.சா–1 நாள்: 02.08.2025

---

**<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பு)</u>**

1. நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் ஓரளவிற்கு எழுத படிக்க தெரியும். பிரதிவாதி துரைசாமி எனக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 140/2018 வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு விவரங்களை நான் படித்துப் பார்த்து உள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். அந்த வழக்கில் பிரதிவாதி என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் அந்த விவரங்களை படித்துப் பார்த்து உள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

2. அசல் வழக்கு எண் 72/2019 வழக்கு சொத்தில் பிரதிவாதி தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து வருவாய் துறை ஆவணங்களில் பிரதிவாதி பெயர்தான் உள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.02 19:43:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.